REGD. No. M 6311

PHONE No. 35030

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 259

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: சித்திரை 2உ புதன் (14-4-54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 3உ வியாழன் (15-4-54)

'நாம் வேண்டும் சமூக சீர்திருத்தம் பார்ப்பனர்களுக்கும் சேர்த்துத்தான்'

—(:)—

'வேற்றுமையை தூண்டும் மதங்கள், ஜாதிகள் ஒழிக்கப்பட வேண்டும்'

—(:)—

'எல்லோரும் ஓர் இனம் என்ற — உயர் ஞானம் பெருக வேண்டும்'

பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ. அறிவுரை

★

"இன்றைய சமுதாயம் நம்மால் எண்ணிப் பார்க்க இயலாத அளவுக்கு இழி நிலையிலிருக்கிறது; இந்த இழி நிலையைப் போக்க எண்ணுபவர்களுக்கு துணிவு இருக்க வேண்டும்; துணிவிருந்தாலும் சூழ்நிலைகள் சரிவர அமையாது. சமுதாயத்திலே நிலவுகிற இழிவுகள் சாதாரணமானவையல்ல; இங்கென்ன ஒரு மதமா? சிலபல ஜாதிகள் மட்டுமா? எத்தனையோ! எத்தனையோ!! இவற்றிற்கும் மேலாக இந்த இழிநிலைகளின் அடிப்படையிலேயே இன்னமும் நிலைத்து நிற்கிற ஏழை - பணக்காரன், அடிமை - ஆண்டான், தொழிலாளி - முதலாளி, விவசாயி - நிலப்பிரபு என்கிற பேதங்கள்! இந்த இழிநிலைகளை எதிர்த்துப் போரிட எல்லோராலும் இயலவில்லையே! எதிர்த்துப் போரிடப் போதிய அறிவும், மனோதிடமும் மக்களிடை இல்லையே! மக்களின் மனநிலை சரியில்லாததால்—தங்களை வாழவொட்டாது வீழ்த்துகிற சமுதாய சீர்கேடுகளை எதிர்க்கும் துணிவில்லாததால் எத்தனைபேர் தங்கள் வாழ்வை இழக்கின்றனர்; தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்!"

—என்று, தஞ்சை மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில், தோழர் க. அன்பழகன், எம். ஏ. அவர்கள் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"வேலை கிடைக்கவில்லை—வேலை இல்லாததால் வருமானமில்லை; வருமானமில்லாததால் வறுமை தலைவிரித்தாடுகிறது; வயிற்றுப் பசியைப் போக்கிக்கொள்ள வழி இல்லை என்றறிந்ததும், இறக்கத் துணிகிறான் இளைஞன்! இன்னும் எத்தனையோ பேர்—'நாமும் வாழ முடியும்' எனும் தன்னம்பிக்கை இல்லாதவர்கள்! வாழ்வென்றால் என்ன என்றே புரிந்துகொள்ளாத நிலையிலிருப்பவர்கள்!!—இவற்றிற்கெல்லாம், மக்கள் தங்களின் வாழ்வை அலட்சியப் படுத்துவதும், வாழ்வு முறைகளைப் புரிந்துகொள்ளாததும் கூட நல்ல காரணங்கள் எனலாம்."

"சமுதாயத்திலே மக்கள் எல்லாம், தங்களிடையே நிலவுகிற சாதிகளை மறந்துவிட வேண்டும்; அந்த சாதிய எண்ணங்களைக் கைவிட வேண்டும்; அந்த எண்ணங்களின்மீது எழுப்பி வைத்துள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒதுக்கிவிட வேண்டும்; 'எல்லோரும் ஓர் இனம்,' என்ற உண்மையான நல்லெண்ணம் நாட்டவர் உள்ளத்தில் எல்லாம் ஏற்பட்டாக வேண்டும்; மதமாச்சரியங்களும், கடவுள் நம்பிக்கைகளும் அவர்களிடம் அறவே ஒழிந்தாக வேண்டும்; மதம் எதுவானாலும், அது இதுவரையிலே அதைப் பின்பற்றியவர்களுக்கு என்ன நன்மைகளைச் செய்திருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்; கடவுள் நம்பிக்கைகள், மக்களுக்கு எதுவும் எப்போதாவது அவர்களின் வாழ்வுப் பிரச்னையைத் தீர்ப்பதாயிருந்திருக்கிறதா என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தத் தீய எண்ணங்களையும், சாதீய சழக்குகளையும், மதமாச்சரியங்களையும் ஒழித்துக்கட்டுவதில் இன்னமும் நமது பணி பலப்பட வேண்டும்—தீவிரமாக வேண்டும்."

"சாக்ரடீசையும், கமால் பாட்சாவையும், புத்தனையும், ஆப்ரகாம் லிங்கனையும், இன்னபிற அறிவொளிகளையும் மக்கள் புரிந்து கொண்டாக வேண்டும்; அவர்கள் தந்து சென்றுள்ள அரிய கருத்துக்கள், இந்தச் சமூகத்தை சீர்திருத்த நிச்சயமாகப் பயன்படும்; அந்தப் பெரியோர்தம் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, ஏற்க வைத்து, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்,' என்னும் புதிய கருத்து மக்கள்தம் உள்ளத்திலே நிலைநாட்டப்பட வேண்டும்."

(3-ம் பக்கம் பார்க்க)

தஞ்சை மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை வகித்த

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

சொந்த அகதிகளைக் காக்க இந்திய சர்க்கார் தயங்குவது ஏன்?

பாகிஸ்தான் அகதிகளுக்காக கோடிக்கணக்கான ரூபாயைச் செலவிடுகிறதே!

13—4—54 'தினமணி' இதழில் "கைத்தறியைக் காப்பாற்றுங்கள்" என்று மதுரை ஏ. வைத்தியநாதய்யரால் எழுதியுள்ள கட்டுரையில் கூறியிருப்பதாவது:—

"வேலையிழந்த எல்லா நெசவாளர் குடும்பங்களையும் கண்டுபிடிக்கவும், அவர்கள் தம் தொழிலை மீண்டும் ஆரம்பிக்க உதவவும் சர்க்கார் ஒரு ஒழுங்கான திட்டம் வகுக்க வேண்டும்."

"பாகிஸ்தானிலிருந்து நம் நாட்டுக்கு வந்துள்ள அகதிகளைக் காக்க ஆண்டுதோறும் இந்திய சர்க்கார் கோடிக்கணக்கில் பணம் செலவிடுகின்றனர்; ஆனால், சொந்த நாட்டிலேயே அகதிகளாக அல்லலுறும் லட்சக்கணக்கான நம் சகோதர நெசவாளர்களைப் பற்றி யார் நினைக்கிறார்கள்?

"சர்க்காரும், மக்களும் கைத்தறி நெசவாளியையும், கைத்தறி ஜவுளியையும் பாதுகாக்க துணிச்சலான ஒரு நிர்மாண இயக்கம் தொடங்கியாக வேண்டும்."

ஐந்தாண்டு திட்டத்திற்கு கடன் திரட்டப்படுகிறது

இந்திய சர்க்கார் அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 14—

'ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கியுள்ள அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கடன் திரட்டப்போவதாக இந்திய சர்க்கார் அறிவித்துள்ளனர்."

"ஏப்ரல் 19-ந் தேதி முதல் கடன் திரட்டப்படும்."

"இந்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் அவ்வப்போது கடன் திரட்டுவார்கள். எனினும், தற்போது ஐந்தாண்டு திட்டத்திற்காக திரட்டப்படும் கடன் விசேஷமானதாகும். இந்திய அரசாங்கம் திரட்டும் இந்தக் கடன் மாகாண சர்க்கார்களுக்கும் கிடைக்கும்"

மேற்கண்ட விபரங்களைக்கூறி, பிரதம மந்திரி பண்டித நேரு இன்று பொது மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

அதில், "நூற்றுக்கு மூன்றரை ரூபாய் வீதம் வட்டி கொடுக்கும் இந்த கடன் எல்லோருக்கும் பொதுவானது; யார் வேண்டுமானாலும் கடன் தந்து உதவலாம்," என்றார்.

மக்கள் கோரிக்கையை மதிக்காத பிரதமர்!

பெங்களூர், ஏப். 12—

மின்சார தீப்பற்றி எரிந்து போய்விட்டது பற்றி குறை தெரிவித்து பொது மக்கள் கொடுத்த மனுவை பொது இடத்திலேயே மைசூர் முதன் மந்திரி அனுமந்தய்யா மிதித்து எறிந்ததாக புகார் கூறி, மைசூர் சட்டசபையில் ஒரு அவசர தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இந்தத் தீர்மானம் குறித்து, சபாநாயகர், முதன் மந்திரியிடமிருந்து சரியான பதிலை பெற விரும்பினார், புகாரை முதன் மந்திரி மறுத்தார்.

சபாநாயகர் கேட்ட கேள்விகள் பலவற்றிற்கு முதன் மந்திரி ஒரே பதிலை திரும்பத் திரும்பக் கூறினார். முடிவில் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

அமிர்தசரஸ், ஏப். 13—

கிராமங்களிலுள்ள பெண்களின் நலன்களைக் காப்பதற்காகப் படித்த பெண்கள் தினம் கொஞ்ச நேரமாவது செலவிட வேண்டுமென மக்கள் சபை சபாநாயகர் கேட்டுக் கொண்டார்.

நம் நாடு

திராவிடத் தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 14—4—54 புதன்

உதட்டு உறவு!

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தில் இராணுவத்தினர் புரட்சி தோன்றியது. மக்களை மதியாது, மக்கள் நலம் கருதாது, மதுவிலும், பிற மாதர் பிடியிலும் தம் காலத்தைச் செலவிட்டுவந்த பரூக் மன்னன் விரட்டப்பட்டான். அவனுக்கு அரணாக இருந்து, கட்டியம் கூறிக் கிடந்த வாப்த் கட்சியின் ஆதிக்கம் அகற்றப்பட்டது. மதோன்மத்தனான மன்னன் மீதும், அவன் கோலாகல வாழ்விற்கு வழி செய்துகொண்டிருந்த அக்கிரம ஆட்சியாளரிடத்தும், எகிப்து மக்களுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருந்த எரிச்சல், உட்பகை, அவர்களை வீழ்த்தக் கிளம்பிய இராணுவத் துறையினருக்கும் மக்கமலமாக அமைந்துவிட்டது.

மன்னன் தொலைந்ததும், அவன் ஏவல்படி ஆடிக் கிடந்த எடுபிடிகள் ஒழிந்ததும், தங்களுக்குச் சிறந்ததோர் புத்தம் புது வாழ்வைக் கொணர்ந்து தருவர் இராணுவத்தினர் எனக் கற்பனை செய்து, களிப்புக் கடலில் மூழ்கிக் கிடந்தனர் நாட்டுக்குரிய நன்மக்கள். நாட்கள் கூடினவே ஒழிய நம்பிக்கை ஈடேறும் நிலை பிறக்கவில்லை. நாள் செல்லச் செல்ல துவக்கத்தில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை ஆட்டம் கொடுக்கத் தொடங்கிவிட்டது. கூடா ஒழுக்கத்தினரும், கொடுங்கோலனும் தொலைந்த செய்தி கேட்டு, எகிப்து மக்களின் முகங்களில் தோன்றிய புத்தொளி சிறுகச் சிறுக மங்கத் தொடங்கியது. உள்ளத்திலே மூண்ட ஆர்வம், கொஞ்சம் கொஞ்சமாகக் குன்றத் துவங்கியது.

ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள ஆட்கள் மாறினாலும், எதிர்பார்க்கும் நலன்களோ, எடுத்துக் கூறப்பட்ட ஏற்பாடுகளோ, தங்களுக்குக் கிடைத்துவிடும் என நம்பிக் கிடப்பது ஏமாற்றத்தையே பயக்கும் என்ற உண்மையை அனுபவ வாயிலாக எகிப்தியர் அறியத் தொடங்கினர். ஆட்சி முறையின் அடிப்படையில் மாற்றம் செய்தால்தான், மக்கள் நல்வாழ்வு பெறுவது உறுதியாகும் என்ற சிறந்த உண்மையையும் எகிப்து மக்கள் ஒருவாறு உணரத் தொடங்கினர். மக்களாட்சிமுறை வெற்றி பெறுவதும், தோல்வி அடைவதும், விழிப்புணர்ச்சியும் அரசியல் அறிவும் மக்களிடம் எந்த அளவு வளம்பெற்று இருக்கின்றனவோ, அதனைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்ற மகத்தான உயர் கோட்பாட்டைத்தான், எகிப்து அரசியல் நிகழ்ச்சிகள் நமக்கு போதனை புரிகின்றன என்பதில் ஐயமில்லை. இந்தச் சிறந்த நிலையை எகிப்து மக்களின் பெரும்பான்மையினர் உணர்ந்திருக்கிறார்களா என்பதை திட்டமாகக் கூறுவதற்கில்லை. இதை அம்மக்கள் உணர்ந்திருப்பதாகவே வைத்துக் கொண்டு பார்த்தாலும், தனி நபர்களிடம் வேறு எதற்காகவோ தங்களிடம் பதிந்துள்ள பற்று பாசத்தைக் கடந்து, தங்களுக்கு உண்மையான நலம் செய்யும் நல்ல கொள்கையினரைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற கண்டிப்பான நெஞ்சுரம் அவர்களுக்கு இருக்கிறதா என்பதும் விவாதத்திற்குரிய விஷயமாகும்.

தீமையை வெறுக்கக் கற்றுக்கொண்ட அளவிற்கும், விடுதலை ஆர்வம் கொண்ட அளவிற்கும், விரும்பியதைப் பெற செயலாற்றவும், செயல் முறை தெரியவும் எகிப்து மக்கள் தீவிரம் கொண்டனர் எனச் சொல்வதற்கில்லை.

மன்னனின் போக்கிலும், அமைச்சர் வழியிலும் அதிருப்தி கொண்ட இராணுவத்தினர், மக்கள் மனவளத்தை நேரடியாக அறிந்து கொள்ளாமலே, ஆட்சியினரை வீழ்ச்சியுறச் செய்யும் பெரும் பணியினை மேற்கொண்டனர். கயவனின் ஆட்சி அழியவேண்டும் என விரும்பிக் கிடந்த மக்களும், தங்கள் விருப்பத்தை வெற்றியாக நிறைவேற்றிய இராணுவ வீரர்களின் செயலைப் பாராட்டுவதும், சிப்பாய் துரைகளிடத்தில் நம்பிக்கை வைப்பதுமே, தங்கள் அரசியல் கடமை என இருந்து விட்டனர். மக்களிடம் காணப்பட்ட இந்த அரசியல் அலட்சியப் பண்பு, மக்களை மந்தைகளென மதித்து, அவர்கள் நலன்களைப் புறக்கணித்து, தங்களுக்குள்ளாக பதவிக்கு அடித்துக் கொள்ளும் அதிகார அரசியல் போராட்டத்தை இராணுவத் தலைவர்களிடம், அவர்களையும் அறியாமலே தோற்றுவித்து விட்டது.

அதிகாரம்—அதிலும் அரசியல் அதிகாரம் மட்டாதது—மோகனமானது—போதை மிகுந்தது. ஒருமுறை, இமை மூடி திறக்குமளவு, ருசி பார்த்து விட்டாலும், ருசி பார்த்தவர்களுக்கு மேலும், மேலும் அதை ருசி பார்க்கத் தூண்டுதல் அளிப்பதையே பேராற்றலாகக் கொண்டிருப்பதாகும், அரசியல் அதிகாரம்!

அந்த போதையைப் பழகினவர், அதைக் கைவிட ஒப்புவதில்லை. நேரிய முறையில் அதைப் பெறமுடியவில்லையானால், சதி, சூழ்ச்சி, சாணக்கிய ஆகிய எவ்வழியை மேற்கொண்டேனும் அதிகார மதுவை பருக அலைந்து திரிவர். அறநெறி கற்றவரும், அதன் வழிநின்று ஒழுகிப் பழகினவரும், அதிகாரம் என்ற பலி பீடத்தில், அதை பலியிட வெட்கப்படுவதுமில்லை — வேதனைப்படுவதுமில்லை. அதிகாரத்தை இழந்தவர்கள், அதிகாரம் பெறாது ஏமாற்றம் கண்டவர்கள், அப்பின் உண்டு பழகியவர்கள், அது உண்ணக் கிடைக்காததால் அடையும் இழிந்த நிலையையே இறுதியில் அடைவர்.

எகிப்து இராணுவ சர்வாதிகாரி நஜீபுக்கும், அவர் புரட்சிக் குழுவில் பலம் பொருந்திய அப்டல் நாசருக்கும் ஏற்பட்டுள்ள பிணக்கும், அதன் விளைவாக எகிப்தில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பமும், மேற்கூறிய கருத்துக்களை வலியுறுத்துகின்றன. இருவருக்குமிடையில் ஏற்பட்ட மனப் பிளவு, எகிப்து நாட்டின் எதிர்கால நலனைக் கருதுவதன் கொண்டு சீர்செய்யப்பட்டு விட்டதாகச் செய்திகள் குவிந்தன. இருவரும், ஒருவரை ஒருவர் எகிப்து நாட்டு ஆச்சாரப்படி, கட்டி அணைத்துக்கொண்டு முத்தமிட்டும் கொண்டனர்; புகைப் படமெடுத்துங் கொண்டனர். பின்னர் நடந்த சம்பவங்கள், இப்பொழுதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் அரசியல் குழப்பங்கள், இரு இராணுவத் தலைவர்களுக்கும் இடையேயுள்ள பகையை விளக்கமாகக் காட்டிக் கொண்டு இருப்பதோடு, புகைப்படமும் ஆலிங்கனமும் வெறும் வெளி வேஷம்—அரசியல் சூதுமதியினரின் சூதாட்டம் என்பதையும் உலகத்தினருக்குக் காட்டிவிட்டது. அவை அனைத்தும் வெறும் உதட்டு உறவு! அதுமட்டுமா?

எகிப்து நாட்டின் எதிர்காலத்தைக் குறித்தும், நாட்டு மக்களின் நல்வாழ்வைக் குறித்தும், அந்த இராணுவத் தலைவர்களுக்கு இருக்கிற கவலையைக் காட்டிலும், தங்கள் தங்கள் கையில் சிக்கியுள்ள அரசியல் அதிகாரத்தை நிரந்தரமாகக் காப்பாற்றிக் கொள்வது எப்படி என்பதிலேயே அவர்களுடைய கவலை இருந்து வருகிறது.

சர்வ வல்லமையுடைய எகிப்து மக்கள், தங்களிடம் இயல்பாக அமைந்துள்ள உரிமையை மறந்து, இராணுவத் தலைவர் இருவர் அதிகாரத்திற்கு மோதிக்கொள்ளும் அரசியல் குத்துச் சண்டையை வேடிக்கைப் பார்த்து வருகின்றனர். இந்த அரசியல் வேடிக்கையிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் மட்டுமா? பதவி தேடிகள் கூடத்தான் படித்துக்கொள்ள வேண்டும்!

'தேசிய மொழியாக இந்தியை ஒப்புக்கொண்டது அதைபோதனமொழியாக ஏற்றுக் கொண்டதாக ஆகாது'

—(:)—

'தமிழகத்தில் தமிழ்தான் போதன மொழியாக இருக்கும்'

—(:)—

இந்திக்கு எதிராகக் கல்வி அமைச்சர் போர் முரசம்

சென்னை, ஏப். 14—

"வட நாட்டிலுள்ளவர்கள், மற்ற மாநில மொழிகளைக் காட்டிலும், இந்தியே கல்லூரிகளில் பாடமொழியாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள்—போராடுகிறார்கள்; ஆனால், ஒவ்வொரு மாநிலத்திலும், அந்தந்த மாநில மொழியே பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் போதன மொழியாக இருக்க முடியுமே ஒழிய, இந்தி அந்த இடத்தை எந்தக் காலத்திலும் கைப்பற்ற முடியாது."

"தமிழகத்தில், தமிழ் மொழிதான் பாட மொழியாகப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இருக்கும்; இதை இப்பொழுதே திட்டவட்டமாகத் தெரிவித்துவிடுவதே நலம்; இந்தியை தேசிய மொழியாக ஒப்புக் கொள்வதாலேயே, அதையே உயர்வகுப்புகளிலும் போதன மொழியாக ஏற்றுக்கொள்வதாக ஆகாது,"

—என்று, மக்களின் பலத்த ஆரவார ஒலிகளுக்கிடையே, தமிழ்க் கருவூல வெளியீட்டு விழாவில் பேசுகையில், நிதி மந்திரி சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

சென்ற ஆறரை ஆண்டுகளாகத் தொகுக்கப்பட்டு வந்த தமிழ்க் கலை களஞ்சியத்தின் முதற் பகுதி ஜய ஆண்டின் தொடக்க நாள் அன்று (13—4—54) சென்னை பல்கலைக் கழகக் கட்டடத்தில், திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள் தலைமையில் அரங்கேறியது.

இவ்வெளியீட்டு விழாவுக்கு டாக்டர் ஏ லட்சுமணசாமி முதலியார், சி. சுப்பிரமணியம், பக்தவத்சலம், தி. ஆ. பெ. விசுவநாதம், ரா. பி. சேதுப்பிள்ளை போன்ற பெருமக்களும், மற்றும் தமிழ் அன்பர்களும் வந்திருந்தனர்.

ஆங்கிலம், இத்தாலி போன்ற மொழிகளின் கலைக் களஞ்சியம் வெளியிடுவதற்குப் பிடித்த கால வரம்புக்குக் குறைவாகவே இத் தமிழ்க் கலைக் களஞ்சியம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் முதற் பகுதி 700-க்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்டும், அழகிய படங்களுடனும் சிறப்புற அச்சிடப்பட்டுள்ளது.

விழாவிற்குத் தலைமை தாங்கிய திரு அவினாசிலிங்கனார் கலைக் களஞ்சியம் வரலாற்றை எடுத்துக் கூறி அன்பர்கள் அளித்த உதவியையும் பாராட்டையும், அறிஞர்களின் ஒத்துழைப்பையும் சுட்டிக் காட்டினர்.

தலைமையுரைக்குப் பின், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், தமிழ்க்கலை களஞ்சியம் மிகச் சிறப்புற தயாரிக்கப்பட்டுள்ளதென்றும் ஆரவாரமின்றி இத்தகைய அடிப்படை பணியினால்தான் தமிழ் வளரமுடியுமென்றும் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் சி சுப்பிரமணியம் மேலும் பேசுகையில், களஞ்சியம் கொண்டுவர பாடுபட்ட தமிழ் வளர்ச்சிக் கழகத்தையும், அறிஞர்களையும் சிறப்பாக பெரியசாமி தூரனையும் மிகவும் பாராட்டினர்.

பிறகு, பேராசிரியர் சேதுப்பிள்ளை, தமிழ்க் கலைக் களஞ்சியம், பல வகையிலும் சிறப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளது என்றும், வரலாற்று உண்மைகள் பிறழாமலும், ஆறுமுக நாவலர் போன்ற தமிழர்களின் படம் சேர்க்கப்பட்டு தெளிவாகவும் அச்சிடப்பட்டுள்ளது, என்று தமக்கே உரிய எதுகை மோனைத் தமிழில் மொழிந்தார்.

குறிப்பு:— கலைக்களஞ்சியத்தில் கலை, மொழி, அரசியல், விஞ்ஞானம் பற்றிய குறிப்புகள் அகரவரிசையில், விரிவாக இடம் பெற்றுள்ளன. இதன் விலை ரூ 25—2—0 என்று தெரிகிறது.

ф ○○○○○○○○○○ ф

மருத்துவ நிலையத்தில் சி. பி. சிற்றரசு

திருச்சி, ஏப். 14—

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், 12—4—54 அன்று எடமேலையூர் பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிவிட்டு 13—4—54 அன்று திரும்பி, திருச்சி அலுவலகத்திற்கு வந்தது, மாடிப்படியிலிருந்து தவறி விழுந்து வலது கைப்பூட்டு விலகிவிட்டது.

உடனே அவர், திருச்சி மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சிகிச்சைக்காக அங்கு சேர்க்கப் பட்டிருக்கிறார். இரண்டொரு நாட்களில் குணமடையலாம் என்று தெரிகிறது. (ந. நி)

○○○○○○○○○○○○

புதிய முகங்கள்:

உழைப்பாளர்கட்சி உடைபடுகிறது!

—:|—

மந்திரி சபையில் புது முகம்

✶

உழைப்பாளர் கட்சியின் தலைவரான எஸ். எஸ். இராமசாமி அவர்கள், காமராஜர் உருவாக்கிய அமைச்சர் குழுவில் ஒரு அமைச்சராகிவிட்டதால், சட்ட சபைக்குள் இயங்கிவரும் உழைப்பாளர் கட்சியைக் கலைத்துவிட்டு, காங்கிரஸ்கட்சியுடன் இணைந்துவிட ஒப்பிவிட்டார். வெளியில் உள்ள உழைப்பாளர், கட்சியும் சிறிது நாளில் கலைக்கப்படுமாம்!

மீண்டும் மாதவ மேனன்?

முன்பு கல்வி மந்திரியாகயிருந்து தமிழரை வம்புக்கு இழுத்து வந்த மாதவ மேனன் மீண்டும் மந்திரியாகப் போகிறாராம்.

பதவி உறுதி என்று தெரிந்து அவரும் தட்டுமுட்டுச் சாமான் சகிதம் சென்னை வந்து சேர்ந்திருக்கிறாராம்.

★

புதுக் கல்வித் திட்டம் ஒழியும்!

ஆச்சாரியார் எதேச்சாதிகாரமாகக் கொண்டுவந்து புகுத்திய புதிய தொடக்கக் கல்வித் திட்டம் நிச்சயமாக ஒழிக்கப்பட்டுவிடும் எனத் தெரிய வருகிறது.

தோழர் அன்பழகன் பேருரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

தஞ்சை மாவட்ட தி. மு கழக இரண்டாவது சமூக சீர்திருத்த மாநாட்டை என்னைத் துவக்கி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ள வரவேற்புக்குழுவினர்க்கு எனது நன்றி.

தி மு. கழகம் சமுதாயத்தில் ஒரு பெரும் மாற்றத்தை விழைகிறது; அந்த மாற்றம்—சீர்திருத்தம்—அந்த புதுமைக் கருத்துக்கள் நாட்டு மக்களிடையே நடைமுறைக்கு வர இந்த மாதிரி மாநாடுகள் பெரும் அளவில் துணை செய்யும் என நாம் நம்புகிறோம்.

எனவேதான், தி. மு. கழகம் எத்தனை அரும்பெரும் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டாலும், சமுதாய சீர்திருத்தத்தை மறந்துவிட வில்லை

சமீப காலத்தில் தி.மு கழகம் மூன்று பெரும் போராட்டங்களில் ஈடுபட்டு, தாங்கொணாத கொடுமைகட்கும், இன்னல்களுக்கும், அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட கொடிய அடக்குமுறைகட்கும் ஆளாகியிருக்கிறது; இன்னமும்கூட, அப்போராட்டங்களில் ஈடுபட்ட பல தோழர்கள் சிறையிலிருக்கின்றனர்; என்றாலும், இன்று நாம் மீண்டும், சமூக சீர்திருத்தப் பணி ஆற்ற வழக்கம்போல இன்னல்களுக்கிடையே முற்பட்டிருக்கிறோம்

நாம் இங்கே கூடியுள்ள இதே நேரத்தில் புதுவை மக்கள், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போர் முரசு கொட்டி அறப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்தப் போரிலும் கூட தி. மு கழக வீரர்கள் பங்கு பெற்றவண்ண முள்ளனர்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், நாம் எவ்வளவுதான் அரசியல் போராட்டங்களிலும், அன்றாட அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொண்டாலும் இந்த நாட்டிலே சீர்குலைந்து அழிந்து நிற்கும் சமுதாயத்தை செப்பனிடுகிற கடினமான வேலையையும் மறந்திடவில்லை.

தேசிய இயக்கம் சமுதாயத்தை மறந்தது; நாட்டு மக்கள் வெளி நாட்டாரின் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று எண்ணிப் பணியாற்றிய தேசிய இயக்கம், நாட்டு மக்கள் சிக்கித் தவிக்கிற வேறு பல தீய சக்திகளிடமிருந்து அவை விடுதலை பெறவேண்டும் என்று எண்ணிப் பார்க்கவில்லை, ஆனால், இன்றைய தி. மு கழகம், சமூக சீர்திருத்தப் பணியை வகை வகையான இயக்கங்களின் மூலமாகச் செய்து வந்திருக்கிறது.

சுயமரியாதை இயக்க காலத்திலிருந்து இன்று வரை நாம் அந்தப் பணியை இடை விடாது தொடர்ந்து, இன்னல்களுக்கு ஆளாகி நடத்திக்கொண்டே வந்திருக்கிறோம்.

அப்போதெல்லாம், 'சாதி முறைகள் ஏன்?'—என்றால், எதிர்ப்பவர்ஏராளம்; 'கணக்கற்ற கடவுளர்கள் ஏன்?'—என்றால், கையில் கிடைத்ததைக்கொண்டு தாக்குவர் 'மதம் மக்களுக்கு அபினியாயிற்றே,' என்று அறிவுரை பகன்றால், 'போடா அறிவில்லாதவனே,' என்ற பழிச்சொல் தான் வீசப்படும்.

இப்படி இந்தச் சீர்திருத்தக் கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில் எல்லாம் நாம் பட்ட துயரங்கள் ஏராளம். நான் பேசுகிற இந்த அரங்கத்தின் பெயரான் அழகிரி, இந்தச்சீர்திருத்த எண்ணங்கொண்டு பணிபுரிந்த காலத்தில் பட்ட இன்னல்கள் என்ன கொஞ்சமா?

நாம் செய்கிற இந்தப் பணியை, மேலை நாடுகளில், சமுதாய கட்டுக்கோப்பை—அமைப்பு முறைகளை மாற்றுவதின் மூலமும், விஞ்ஞான வளர்ச்சியின் மூலமும், அறிவுப் பெருக்கத்தின் மூலமும் சீர்திருத்தவாதிகள் செய்து வந்துள்ளனர்; ஆனால், இந்த நாட்டிலே, சமூக சீர்திருத்தம் மதத்தின் அடிப்படையில் தான் செய்யப்பட்டது—நாயன்மார்களையும், ஆழ்வாராதிகளையும் அழைத்துத்தான் செய்யப்பட்டது.

பௌத்த, வைணவ, சைவ சமயங்களால் தான் சீர்திருத்தங்கள் பேசப்பட்டது.

திருமூலர், பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்கர், இன்னும் எத்தனையோ பேர் சீர்திருத்தம் பேசினார்கள்.

என்றாலும், இன்றுவரை பேதங்கள் நீங்கவில்லை; சமயச் சண்டைகள் குறையவில்லை; மத மாச்சரியங்கள் அழியவில்லை.

ஆண்டவனை, அறிவாக, ஒளியாக ஆக்கியும் சீர்திருத்தம் தேடினார் இராமலிங்கர், கிடைத்ததா வெற்றி?

ஆண்டவன் பெயரால் திருடர்கள் வாழ்கிறார்கள்; ஆண்டவனின் தயவால் ஏற்படும் தீமைகள் எண்ணற்றன; ஆண்டவன் மீது கொண்ட பக்தியால் விளைந்த நாசங்கள் கணக்கிலடங்கா; மது தரும் போதையைப் போன்று பக்தி தரும் போதையும்; அந்த போதையைக் குடித்துக் கொண்டே இருக்கச் சொல்லும் புரோகிதமும் ஒழிந்தாக வேண்டும்!

நான் கேட்கிறேன் — இந்த நாட்டிலே) நிலவுகிற புரோகிதம் சரிதானா? தேவைதானா?—என்று! வேண்டுமானால் குன்றக்குடி அடிகளார் வாதிடுவாரா, புரோகிதம் தேவை என்று? இதற்கு நான் பதில் சொல்ல மாட்டேன். காலஞ்சென்ற நாகியாரும், கவியரசி சரோஜினியும், ரவீந்திரநாத் தாகூருமே பதில் சொல்வர்.

சமூக சீர்திருத்தத்திற்கான சட்டங்களைக் கொணர சர்க்கார் தயங்குகிறது. சென்னையிலே, இதுவரை நடந்த சுயமரியாதை திருமணங்கள் மட்டும் செல்லும்—இனி நடப்பவை செல்லாது என்ற நிலை இருக்கிறது. வேறெப்படி நடத்தப்படுகிற திருமணங்களைக்காட்டிலும் சுயமரியாதைத் திருமணங்கள் எந்த வகையில் குறைந்தவை?

டெல்லி அரசாங்கமோ, இந்த சீர்திருத்தச் சட்டத்தை அமுலாக்கத் தயங்குகிறது.

ஒருவகையிலே, ஆங்கிலேயர் வரவு தமிழர் சுயமரியாதை பெறவும், நல்ல ஆங்கிலக் கல்வி பெறவும் உதவிற்று; ஆங்கிலக் கல்வியினால்தான் சர் இராமசாமியும், டாக்டர் லட்சுமணசாமியும், சர். ஆர். கே. சண்முகமும் உலகப் புகழ் பெற முடிந்தது

அறிவைப் படிப்படியாகப் பெற்று வரும் நமது சமுதாயத்தின் அறிவுக் கண்களை அழித்துவிடத்தான் திட்டமிட்டார் ஆச்சாரியார்—புதிய கல்வித் திட்டத்தின் மூலம்! எதிர்த்தோம்.

நாம் செய்யப்பட வேண்டும் என்கிற சீர்திருத்தம், பார்ப்பனர்களுக்கும் சேர்த்துத்தான் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

வேற்றுமையைத் தூண்டும் மதங்களும், சாதிகளும், ஒழிக்கப்பட வேண்டும்.

மக்கள் அறிவொளி பெற்று எல்லோரும் ஓரினமாய் ஒன்று திரள, சமுதாயப் பணியை தொடர்ந்து செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, இந்த மாநாட்டை துவக்கிவைக்கிறேன்.

மேயர் பதவி ராஜிநாமா

மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டுள்ள பி. பரமேஸ்வரன், இன்று சென்னை நகர சபை மேயர் பதவியை ராஜிநாமா செய்தார். புதிய மேயர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில், துணை மேயர் டி. வேணுகோபால் ராவ் தற்காலிக மேயராக இருப்பார்.

சென்னை சட்டசபை கூட்டம்

—:o:—

மே முதல் வாரத்தில் நடைபெறும்

முதன் மந்திரியின் அறிவிப்பு

சென்னை, ஏப்ரல் 14—

சென்னை சட்டசபை மே மாதம் முதல் வாரம் கூடும் என்று முதல் மந்திரி காமராசர் அறிவித்தார்.

சட்டசபையில் ஒரு ஸ்தானத்திற்காக தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் தற்போது சட்டசபையில் காங்கிரஸ் கட்சியின் பலம் 137 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

மந்திரிகள் இராமசாமி படையாச்சியும், மாணிக்கவேலரும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிட்டதாகவும், அவர்களுடைய கட்சிகளான உழைப்பாளர் கட்சியும், பொதுநலக் கட்சியும் கலைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உழைப்பாளி கட்சி தலைவர் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளை விளக்கி காமராசர் கீழ்க்கண்டவாறு கூறினார்:—

"தற்போது முதல் நடவடிக்கையாக சட்டசபையில் உழைப்பாளி கட்சி கலைக்கப்படும்; அடுத்த சட்டசபை கூட்டங்களிலிருந்து உழைப்பாளி கட்சி எம். எல் ஏ-க்களும், பொதுநலக் கட்சி எம் எல். ஏ.-க்களும் காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து காங்கிரஸ்காரர்கள் உட்காரும் வரிசையில் உட்காருவார்கள்," என்றார்.

மலபாருக்காக ஒரு மந்திரி ஸ்தானம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அதுவும் பின்னால் பூர்த்தி செய்யப்படும் என்றும், அந்த ஸ்தானத்திற்கு யாரை நியமிப்பது என்பதைப் பற்றி தான் இன்னும் முடிவுக்கு வரவில்லையென்றும் குறிப்பிட்டார்.

"சர்க்காரின் கொள்கை என்ன? அதில் ஏதாவது மாறுதல் இருக்குமா?" என்று முதலமைச்சர் காமராசரைக் கேட்கப்பட்டபோது, இடையில் சி சுப்ரமணியம் குறுக்கிட்டு "எல்லாம் காங்கிரஸ் ஆட்சிதானே; மாறுதல் அவசியமில்லை," என்றார்.

பார்லிமெண்டரி காரியதரிசிகளோ அல்லது உதவி மந்திரிகளோ நியமிப்பதைப் பற்றி பின்னர் முடிவு செய்யப்படும் என்று காமராசர் தெரிவித்தார்.

மந்திரிகளின் இலாகா விவரம்

காமராசர்:—
பொது நிர்வாகம், போலீஸ்.

ஏ பி ஷெட்டி:—
வைத்தியம், கூட்டுறவு, வீட்டு வசதி, முன்னாள் இராணுவத்தினர்.

பக்தவத்சலம்:—
விவசாயம், கால்நடை, பெண்கள் நலம், கைத்தொழில், தொழிலாளர்.

சுப்பிரமணியம்:—
நிதி, உணவு, கல்வி, சிறைகள், கோர்ட்டுகள், சட்டம்.

பரமேஸ்வரன்:—
போக்குவரத்து, அரிசனம், மடாலயம், மதுவிலக்கு.

ராமநாதபுரம் ராசா:—
மராமத்து, வீட்டு வாடகை கட்டுப்பாடு, விளையாட்டு.

மாணிக்கவேலர்:—
ரெவின்யூ, வர்த்தக வரி.

இராமசாமி படையாச்சி:—
ஸ்தலஸ்தாபனம்.

★

விலகிய மந்திரிகள்!

ஆச்சாரியார் மந்திரி சபையில் 11 மந்திரிகள் இருந்தனர் அவர்களில் 5 பேர் காமராசர் மந்திரி சபையில் இடம் பெற்றுள்ளனர். மந்திரி சபையிலிருந்து விலகியவர்கள்:— வெங்கிடசாமி நாயுடு, குட்டிகிருஷ்ணன் நாயர், ஜோதி அம்மாள், ராஜாராம் நாயுடு, டாக்டர் கிருஷ்ண ராவ், வழுதிசாமி கவுண்டர் ஆகியோராவர்.

மறைந்த மாவீரர்கள்.........

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜாதியாலே உயர்வு பெற ஓடோடி வருபவர்கள் இப்போது அதே ஜாதிமுறை அவர்களை உருக்குலைக்கும் சக்தியாக மாறியிருப்பதை உணருகிறார்கள். ஜாதிமுறை இப்போது ஒரு செல்லாக்காசாக ஆகிவிட்டது. சமூகத்தின் முழுச் சம்மதத்தோடு அதிகாரபூர்வமாக அந்தச் செல்லாக் காசைப் புதுப்பிக்க முடியாமல் போனதால், சில கள்ள நாணயங்கள் கண்காணிக்க முடியாத இடங்களில் நடமாடுகின்றன. காலப் போக்கில் நம் உழைப்பின் முன்னால் அவை ஒடி மறையும் என்ற உறுதி நமக்கு உண்டு.

ஜாதி முறையால் எந்த வகுப்பார் ஆதாயம் பெற்றார்களோ அவர்களே கஷ்டக் கணக்கோடு அதற்கு ஒரு முடிவு காண முனைந்து விட்டனர்.

இந்த உப கண்டத்தின் முதலமைச்சர் நேரு பார்ப்பன ஜாதியைச் சேர்ந்தவர்; அவருடைய தங்கை திரு. கிருஷ்ணா மணந்திருப்பது திரு. ஹத்தீ ஸிங் என்ற க்ஷத்திரியரை.

மதிக்கும் பழகோவிந்தத் தக்கும் வேற்றுமை தெரியாத திரு. இராஜகோபாலாச்சாரியார் வைசிய குலத்திலிருந்து தனக்கு ஒரு மருமகன் தேடியிருக்கிறார்.

மங்களூரில் பிறந்த பார்ப்பனப் பெண்ணான திரு. இராதா பாய், ஜாதி முறைப்படி சூத்திர குலத்திலே தோன்றிய திரு. சுப்பராயனைக் கணவனாக ஆக்கிக் கொண்டார்.

பஞ்சம ஜாதியிலே பிறந்த திரு. அம்பேத்காருக்கு பார்ப்பன குலத்திலே உதித்த திரு. இலட்சுமி மனைவியாகக் கிடைத்தார்.

ஐந்து வருணத்தாருக்கும் சொந்தக்காரர்களாக அவர்களே ஆகிவிட்ட பிறகு, அந்த முறையை இரவல் பெற்ற நமக்கு மட்டும், அது தவிர்க்க முடியாத தேவையாக எப்படி மாறியது என்பது தான் நமக்கு விளங்கவில்லை.

நாம் செய்த இரண்டாவது வேலை, இந்நாட்டு மக்களைச் சிந்திக்கச் செய்திருக்கிறோம்.

ஆண்டவன்கள் பேராலும், ஆகமங்கள் பேராலும் அறிவுக்கு இடப்பட்டிருந்த விலங்கை உடைத்தெறிந்தோம்.

கால்களை நாம் நடப்பதற்கும்—கைகளை வேலை செய்யவும்—கண்களைப் பார்க்கவும் காதுகளைக் கேட்கவும்—படைத்த கடவுள் மூளையை மட்டும் அருப்பிடித்துப் போவதற்காகப் படைத்திருந்தால் அந்தக் கடவுளை எப்படி மதிப்பது என்று நமக்கு விளங்கவில்லை.

ஆன்திரர்களிடம் இந்தச் சந்தேகத்தைத் தெளிவாக்கச் சொன்னோம்; உடனே ஆண்டவனுடைய எதிரிகள் என்று நம்மைத் தூற்றத் தொடங்கிவிட்டார்கள்.

இருபத்தைந்து ஆண்டுகளாகச் சமூகத்தில் இருந்த களைகளைப் போக்கினோம்; இப்போது புதிர்ப் பாய்ச்சி விதை தூவத் தொடங்கியிருக்கிறோம்.

உலக வரலாற்றிலேயே சமூகம் சீர்திருத்த உழைத்த வீரர்களைப் பற்றி நம் மக்களிடம் எடுத்துச் சொல்லுகிறோம். நாம் செபலாற்றும்போது, 'இதெல்லாம் நடக்குமா,' என்று சந்தேகத்தோடு கேட்பவர்களுக்கு 'இதோ உலகில் எல்லா நாடுகளிலும் இதேபோல நடந்திருக்கிறது,' என்று தெளிவாக்குகிறோம்.

நம் மக்களுக்கு அறிவு பெற வேண்டும் என்ற ஆர்வமே மிக மிகக் குறைவு. நல்ல புத்தகங்களைப் படிக்கவேண்டும் என்று நம் பெரியோர்கள் சொல்லும் போது, அவர்கள் குறிப்பிடுவது, 'நல்லதங்காள்' கதையும்—சக்குபாய் சரித்திரமும்—இராமாயண காவியமுந்தான். அதுவும் புண்ணியத்துக்காகப் படிப்பார்களே தவிர, புது உணர்ச்சிக்காக அல்ல; அப்படிப்பட்ட மக்களிடம் சாக்ரடீசையும், ஜோன் ஆப் ஆர்க்கையும் அறிமுகப்படுத்துகிறோம்.

அரசியலிலே தனி நாடு கேட்கிறோம். சமுதாயத் துறையிலே நாம் பெறப்போகும் நாட்டிலே வாழத் தக்கவிதம் மக்களைப் பண்படுத்துகிறோம். நல்ல நாட்டையும் அதில் வாழத்தக்க தகுதிவாய்ந்த மக்களையும் ஒரே நேரத்தில் உண்டாக்கும் பணி நம்முடையது. அந்தப் பணியில் நாம் வெற்றி காணுவது உறுதி. அந்த வெற்றிப் பாதையில் பதித்திருக்கும் படிக்கற்களில் இந்த மாநாடும் ஒன்று.

உங்கள் உழைப்பு பலன் தரட்டும். நீங்கள் தீட்டும் திட்டங்களும், வகுக்கும் வழிகளும், நிகழ்கால சமுதாயத்துக்கு நல்ல மருந்தாக — எதிர்கால சமுதாயத்துக்கு உயிய விருந்தாக அமையட்டும்.

புதுவையில் குண்டர்கள் அட்டகாசம்!

புதுச்சேரி, ஏப். 13—

புதுச்சேரி தெருக்களில் குண்டர்களின் அட்டகாசம் இன்று உச்சநிலையை அடைந்தது.

இணைப்பு ஆதரவு பிரமுகர்களின் வீட்டிற்கு முன்பாக கலவரம் செய்வதற்காகப் பிரெஞ்சிந்திய அரசாங்கம் கைக்கூலிகளை அமர்த்தியுள்ளதாகத் தெரிகிறது. அவர்கள், இணைப்புத் தலைவர்களின் வீடுகளின்மீது, கற்களை வீசியும், கொடிகளைக் கிழித்தெறிந்தும் வருகின்றனர்.

புதுவையிலுள்ள மூன்று நூல் மில்களைச் சேர்ந்த 2,000 தொழிலாளர்கள் இணைப்பு இயக்கத்தை ஆதரித்து நடைபெறும் ஊர்வலத்தில் கலந்து கொள்ள, மில்களிலிருந்து வெளியேறினர். 20 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

பிரெஞ்சிந்தியப் போலீசார் அத்துமீறி இந்திய எல்லையைக் கடந்து பிள்ளை சாவடி என்ற இந்தியக் கிராமத்தில் புகுந்து இந்தியர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக 8 பேர் காயமடைந்தனர்.

சுமார் 100 குண்டர்களுடன் பிரெஞ்சிந்தியப் போலீசார் துப்பாக்கி சகிதம் மேற்படி கிராமத்தின்மீது படையெடுத்தனர். இந்தியக் கிராமத்துக்குள் இருக்கும் பலாத்தோப்பு, தங்களுடையது என்று குண்டர்கள் கூறி அந்தத் தோப்பைக் கைப்பற்ற முயற்சித்தனர்.

ஆனால் இந்திய கிராம வாசிகள் அந்தக் குண்டர்களைக் கடுமையாக எதிர்த்தனர்; உடனே பிரெஞ்சிந்தியப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

மாபெரும் பொதுக் கூட்டம்

★

15—4—'54 வியாழன் மாலை 6 மணிக்கு

தலைவர்: சே. எம். கண்ணபிரான்

பேசுவோர்:
மு கருணாநிதி,
வி. எஸ். கோவிந்தராசன்

இடம்:—சேத்துபட்டு ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள, மேயா சத்தியமூர்த்தி ரோடு, மங்களாபுர திறந்த வெளியில்.

—தி. மு. க. 33-வது வட்டகிளை, செக்காதபுரம் (சேத்துப்பட்டு)

மறைந்த மாவீரர்கள் அழகிரிசாமி, நடராசன், மணி ஆகியோர் நினைவு நமக்குக் கலங்கரை விளக்கமாகும்

தம் முப்புரியை அறுத்தெறிந்தவர் முப்புரி நீக்கம் பற்றி நாவசைக்க மறுக்கிறார்!

ஆனால், அவரைத் தலைவராகக் கொண்ட கட்சியோ அவர் செயலைப் பாராட்டுகிறது!

—o—

சமூக சீர்திருத்த மாநாட்டில் தோழர் பெத்தண்ணன் ஆற்றிய வரவேற்புரை

"மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள இடைவெளியைத் தூர்த்திருக்கிறோம்; 'இப்படியாப் பாடுபடுவது என் தலைவிதி—இன்பங்களை அனுபவிப்பது அவன் செய்த பாக்கியம்,' என்று எண்ணி ஏமாந்தவர்களை விழிப்புறச் செய்திருக்கிறோம்; அடிப்படியிலே கண்ணீர்விட்டு வாழ்ந்த ஆரணங்குகள், ஆண்களோடு சம அந்தஸ்தைப் பெறவும்—'கயிறு போயிற்று, அதனால் களிப்பு கல்லறைக்குள்ளே புகுந்தது' என்று எண்ணிக் காய்ந்த சருகுகளாக மாறிய விதவைகள் புது வாழ்வு பெறவும்—சிற்றாடை கட்டத் தெரியாத சின்னப் பருவத்தில் பொற்றாலி அணிந்து வாழ்வைப் போசுக்கிக் கொண்ட பெண்கள், மலர்ந்து மணம் தரும் நிலை அடைந்த பிறகே ஆண்களோடு தம் வாழ்வைப் பங்கிட்டுக்கொள்ளவுமான சூழ்நிலையை உண்டாக்கியவர்கள் நாம்தான்; ஆண்டவனுக்கு முன்னால்—அலங்கார விளக்குகளுக்கு முன்னால் ஆடி அவருக்கு விளம்பரப் பலகையாக வாழ்ந்த பெண்களின் இழிந்த நிலையைப் போக்கி உயர்ந்த வாழ்வு அளித்திருக்கிறோம்; பெருமையோடு சொல்லிக் கொள்ளுகிறேன்—இவ்வளவையும் நம் தேர்தலில் வெற்றிபெற்று, சட்டசபையைக் கைப்பற்றி, மந்திரிகளாக ஆட்சி செய்யவில்லை; ஆலமரத்தடியிலும், அரசமரத்தடியிலும் மக்களைக் கூட்டிப் பேசியே சாதித்திருக்கிறோம்"

—இவ்வாறு, தஞ்சை மாவட்ட தி. மு. கழக சமூக சீர்திருத்த மாநாட்டில் வரவேற்புரை ஆற்றுகையில், தோழர் என். பெத்தண்ணன் அவர்கள் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

"ஆண்டவனை நாம் பழிக்கிறோம் என்றால், அது யார் செய்த தவறு? ஆண்டவனுக்கு அடிப்படையாக அறியாமையை ஆக்கிவிட்டார்கள்; ஆண்டவனை அக்கிரமங்களுக்கு அடிப்படையாக அமைத்துவிட்டார்கள். நாம், அறியாமையையும் அக்கிரமத்தையும் எதிர்த்து முறியடிக்க முனையும்போது, இடையிலே சிக்கியுள்ள ஆண்டவன் நம் கணைகளுக்குப் பலியாகிறார். தவறு நம்முடையதா? ஆண்டவனுடைய பாதுகாவலர்கள், அவரை, அறியாமைக்கும் அக்கிரமங்களுக்கும் அப்பால் கடத்திவிட்டால் நமக்கும் மகிழ்ச்சி—ஆண்டவனுக்கும் பாதுகாப்பு—அவர்களுக்கும் தொல்லையில்லை."

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நடக்கும் சமூக சீர்திருத்த மாநாட்டில் கலந்துகொண்டிருக்கும் உங்கள் அனைவரையும் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இம் மாநாடு வெற்றிகரமாக நடக்கவும், தாழ்ந்த சமுதாயம் தலைநிமிர்ந்து வாழ நல்ல பாதை வகுக்கவும், நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆலயங்களுக்கும்—அந்த ஆலயங்களினால் தம் வாழ்வை நடத்தும் அர்ச்சகர்களுக்கும், ஆண்டவன்களுக்கும்—அந்த ஆண்டவன்களால் அந்தஸ்தும் அதிகாரமும் பெற்று வாழும் மடாதிபதிகளுக்கும் ஆதிக்கம் தந்த நம் தஞ்சை மாவட்டம், அறிவியக்கத்தின் முன்னணி முகாம்களில் ஒன்றாகப் பரிணமித்திருப்பது கண்டு நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

சமுதாயத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற அடிப்பு, தமிழ் நாட்டில் தீவிரமாகப் பரவத்தொடங்கிய நாளிலிருந்தே தஞ்சை மாவட்டம் தன் பங்கை அளவுக்கு அதிகமாகவே அளித்து வந்திருக்கிறது என்று கூறிக்கொள்ள உண்மையிலேயே பூரிப்பு அடைகிறோம்.

இன்னலையும் தொல்லையையும் இன்முகத்தோடு ஏற்று சமூக சீர்திருத்தப் பணிக்காகத் தங்கள் வாழ்வையே பலியிட்டுக் கொண்ட, நம் மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களான தோழர்கள் அழகிரிசாமி, மாயவரம் நடராசன், நாகை மணி ஆகியோரின் நினைவு ஒன்றுதான் நமக்கு கலங்கரை விளக்காக இருந்து நம்மை நடத்திச் செல்லுகிறது.

அந்த மறைந்த மாவீரர்களுக்கு நம் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்ற காலத்தின் சின்னங்களாகவும், நிகழ் காலத்தின் செல்வங்களாகவும் நம்மிடையே இருக்கும் நம் மாவட்டத்தின் சொத்துக்களான மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார், மாயவரம் என். வி. லிங்கம், குடந்தை கே. கே. நீலமேகம் ஆகியோரின் அனுபவ அறிவுரைகள்தாம் நம்மை நல்ல பாதையில் நடத்திச் செல்லுகின்றன.

இம் மாவட்டத்தின் சமூக சீர்திருத்தக்காரர்களின் சார்பில் அவர்களுக்கு நம் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் மாநாடுகளில் ஒரு பாதி—அதுவும் முதல் பகுதி—சமூக சீர்திருத்தப் பணிக்காக ஒதுக்கப்பட்டிருப்பதைக் காணவேண்டிய ஒரு பிரச்னையாகும்.

அரசியலைக் கைப்பற்றினால் சமூகத்தை தலைகீழாக மாற்றியமைத்து விடலாம் என்று பேசும் அரசியல் குருடர்கள் மலிந்த இந்த நாட்டில், அனைவருக்கும் ஒரு எடுத்துக் காட்டாக சமூகம் செப்பனிடப்பட்டால் தான் அரசியல் உயர்ந்த அந்தஸ்தைப் பெறும் என்று விளக்கவே நாம் இந்தப் பணியைச் செய்கிறோம்.

சமூகத்தில் கோளாறுகள் மலிந்திருப்பதைக் கவனியாமல் அரசியல் ஆதிக்கத்தை மட்டுமே கவனித்த ஒரே காரணத்தால்தான் இந்திய உபகண்டத்தின் அரசியல் செல்லாக் காசுகளுக்கும், கள்ள நாணயங்களுக்கும் மட்டுமே செல்வாக்கு கிடைக்கும் விதம் சீரழிந்து கிடக்கிறது. நம் கட்சி ஒன்றுதான் இதை உணர்ந்து செப்பனிடப்பட்ட சமூகத்தில்தான் அரசியல் சீர்குலையாமல் இருக்கும் என்ற உண்மையை உணர்ந்து நடக்கிறது.

இந்த உபகண்டத்தின் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி, புதுமைக்கும் - புத்துணர்வுக்கும் மதிப்பு தராமல் பழமையையே தன் அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தது என்பதை நாம் அனைவரும் உணருவோம்.

புராணங்களையும், சாஸ்திரங்களையும், இதிகாசங்களையுமே தம் வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொண்டனர் காங்கிரஸ் நண்பர்கள்.

துயிலுறியப்பட்ட துரௌபதியும் கணவனை எண்ணிக் கண்ணீர்விட்ட சீதையும், நாடும் வீடும் கிடைக்காமல் நாதியற்றுப்போன பாண்டவர்களும் அந்தக் கட்சிக்குப் பல நேரங்களில் கைகொடுத்திருக்கின்றனர்.

இராமனையும், கிருஷ்ணனையுமே தம் இலட்சிய உருவங்களாகக் கொண்டு நாட்டு மக்களிடையே பிரசாரம் புரிந்தனர்.

ஏற்கனவே இந்த உருவங்கள் நம் மக்கள் இதயங்களில் ஊறிப் போயிருந்த காரணத்தால் அதிகமான கஷ்டமும் சிந்தனையும் காங்கிரஸ்காரர்களுக்குத் தேவையில்லாமல் போய்விட்டது.

இப்போதுகூட காங்கிரஸ் நண்பர்கள் சமூகத்தில் எந்தவிதச் சீர்திருத்தம் செய்வதாக இருந்தாலும், அந்தச் சீர்திருத்தம் சமூகத்துக்குத் தேவையா என்பதைக் கவனிப்பதைவிட, செய்யப்போகும் சீர்திருத்தத்துக்கு சாஸ்திரங்களும், ஆகமங்களும் ஆதரவு அளிக்கின்றனவா என்பதையே முக்கியமாகக் கவனிக்கின்றனர்.

அடுத்து, மேல்நாட்டு "மேக்கப்"போடு நம் நாட்டில் உலவும் கம்யூனிஸ்டு கட்சி, சமூகத்தில் கைவைத்தால் தங்கள் செல்வாக்கு சீரழிந்து விடுமோ என்ற பயத்தைக் கைவிடாமல் காப்பாற்றி வருகின்றது.

அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களில் யாராவது சமூகச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசினால் அவர்கள் நம் கட்சியில் தயாரானவர்களாக இருப்பார்களே தவிர, அந்தக் கட்சியினரே உருவாக்கியவர்களாக இருக்கமாட்டார்கள்.

கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் நம்மிடையே தோன்றும்போது பெருமையாகக் கூறிக்கொள்ளுகிற ஒரே விஷயம், 'தோழர் இராமமூர்த்தி தன் பூணூலை அறுத்தெறிந்தார்,' என்பதுதான்.

பூணூலை அறுத்தெறிவது சமூக சீர்திருத்தக்காரர்கள் மட்டில் ஒரு புனிதமான செயல்தான்; அதற்காக தோழர் இராமமூர்த்தியை நாம் பாராட்டுகிறோம்; ஆனால், தோழர் இராமமூர்த்தி, பூணூல் அணிவது ஒரு தவறு என்பதற்காக அதை அறுத்தெறிந்தாரா அல்லது கம்யூனிஸ்டு கட்சியின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்ற வேண்டுமென்றால் பூணூல் ஒரு தடையாக இருக்குமே என்பதற்காக அறுத்தெறிந்தாரா என்பது எவருக்குமே விளங்காத ஒரு புதிராக இருக்கிறது.

பூணூல் அணிவது ஒரு தவறு என்று தோழர் இராமமூர்த்தி நினைத்திருந்தால் மற்றவர்களும் அந்தத் தவறைச் செய்யாமல் தடுத்திருப்பார்; பூணூல் அணிபவர்களிடையே பிரச்சாரம் செய்து அவர்களுடைய பூணூல்களையும் அறுத்தெறியச் செய்திருப்பார்; ஆனால் இதுவரையில தோழர் இராமமூர்த்தி பூணூலைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசியதாகத் தெரியவில்லை.

அவர் அறுத்தெறிந்தார் என்று சொல்லி மற்றவர்கள் பெருமைப்படுகிறார்களே தவிர, அறுத்தெறிந்தவர் அதைப்பற்றி பேசியதாகத் தெரியவில்லை.

ஒரு கட்சியே பெருமைப்படும் இந்த விஷயம் தோழர் இராமமூர்த்திக்கு ஒரு சின்ன விஷயமாகத் தோன்றி யிருக்கலாம்; அல்லது இந்து ஆலயங்களுக்குள்ளே நாமும் சில திருவாதவர்களும், இன்னாமியரும், உள்ளே இருப்பவர்கள் சந்தேகப்பட்டால் என்ன செய்வது,' என்று பயந்துகொண்டு விபூதி பூசிக்கொள்ளுவதைப்போல, கம்யூனிஸ்டு கட்சிக்காரர் பூணூல் அணிவது தவறு,' என்று மற்றவர்கள் கண்டிப்பார்களே என நினைத்து, அவர், தன் பூணூலை அறுத்தெறிந்திருக்கலாம்.

இந்த முடிவுக்கு வரவேண்டியிருப்பது குறித்து உண்மையிலேயே வருந்துகிறேன்; ஆனால் வேறு எந்தவிதமான முடிவுக்கும் என்னால் வரமுடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நாட்டிலே உள்ள மற்ற கட்சிகளும், பொதுக்களைப் பற்றிக் கவலைப்படுகிற அளவுக்கு, தேய்ந்துபோன நம் சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை; நம் கட்சி ஒன்றுதான் ஏறக்குறைய இருபத்தி ஐந்து ஆண்டுகளாக மக்களைத் திருத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

சுயமரியாதை இயக்கங்கண்ட தலைவர், பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தமிழ்நாட்டில் எழுப்பிய அறிவுச் சூறாவளியின் காரணமாக, நம சமூகத்தைப் பாழாக்கும் அறியாமை, அகந்தை, ஆணவம் ஆகியவைகள் பொடிப் பொடியாகச் சிதறிப் பறந்துவிட்டன.

உலகத்திலேயே உருவாக்கமுடியாத முறையான ஜாதி முறை... இந்த நாட்டுப் பார்ப்பனர்களும் அவர்களுக்குப் பக்கமேள... கொட்டுபவர்களும் உருவாக்கி... அதைக் காப்பாற்றி வளர்த்து... விட்ட அதிசயத்தை நம் நா... நடைமுறையான் தன் பண்பாடுகளி... ஒன்றாகப் பெற்றிருக்கிறது.

வேறு எந்த விதத்திலு... பெருமையுடைய இலாயக்கில்லா... மல், ஜாதி ஒன்றினாலே... உயர் வகுப்பும் உயர்க்க... ளும்-ஒரு குறிப்பிட்ட ஜாதியி... பிறந்த காரணத்தாலேயே உ... லாச வாழ்வைத் தம் உரிமை... யாக்கிக்கொண்ட எத்தர்களு... ஜாதிக் கொடுமைகளுக்குப் ப... யாகி, வாழ்வில் இருள் ப... விட்டு இப்போதிந்து கிடக்... ஏமாளிகளும்—இந்த சமுதா... தின் நாசச் சின்னங்களா... வாழ்ந்து வருவதை நாம் இரு... வருந்து ஆண்டுகளாக அழி... வருகிறோம்.

(3-ம் பக்கம் பார்க்க)

எஸ். எஸ். இராஜேந்திரன் நாடக மன்றத்தினரின் தமிழ் நாடு சுற்றுப் பிரயாணம்

★

கரூர் N. சேதுராமன் தீட்டிய 'திருமணம்'

அண்ணாவின் 'சந்திரமோகன்'

ஆகிய இன எழுச்சி தரும் இரு நாடகங்கள் நடத்துவர்

நடிகர்கள்:

எஸ். எஸ். இராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், சண்முகசுந்தரி, ஹேமலதா

மற்றும் சிறந்த நடிகர் பலர்

17, 18—4—54 : மதுரை 20—4—54 : கல்லுப்பட்டி

19—4—54: கோவில்பட்டி 22—4—54 : மேலூர்

★

விரைவில் தயாராகிறது:

தோழர் மு. கருணாநிதியின் 'அம்மையப்பன்'

ராஜேந்திரன் நாடக மன்றம்,

68, பஜார் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

கழகக் கூட்டம்

★

எல்காம்வலசு

15—4—54 மாலை 6 மணிக்கு

இடம்: அர்ச்சுனன் திடல்

தலைவர்:

ஏ சேனாபதி, எம். எல். ஏ.

கொடியேற்றுபவர்:

மே. சி. சிதம்பரனார்

அர்ச்சுனன் படத்திறப்பாளர்:

கே. ஜி. ப[illegible]னிச்சாமி, எம். எல். ஏ.

[illegible]:

சி. பி. சிற்றரசு

திராவிட முன்னேற்றக் கழ... அக்கரை தோழர் இரா. செ... செழியன், எம். ஏ. ... அல், அழகிரி அச்சக... அச்சிட்டுப் பெற்ற (18, ... நாராயண செட்டித் ... இராயபுரம்) வெளியிடப்... கிறது. ஆசிரியர்! ... அண்ணாத்துரை, எம். ஏ.